

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், காரையூர், குரு ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 30.08.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்கினார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று முன்தினம் (08.09.2024) திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வக கட்டிடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன், செய்யார் சட்டமன்ற உறுப்பினர் ஒ.ஜோதி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘சமூக நீதிக் காவலர் கலைஞர்’ நூற்றாண்டு விழாக் குழு சார்பில்

# விழுப்புரத்தில் மாபெரும் கருத்தரங்கம்! அமைச்சர் க.பொன்முடி தலைமை!

## பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் – மா.மதிவேந்தன் முன்னிலை!

விழுப்புரம், செப். 10-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் ‘சமூக நீதிக் காவலர் - கலைஞர்’ நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் கருத்தரங்கம் இன்று (10.9.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணியளவில் நடைபெறுகிறது.

விழாக்குழுத் தலைவர் அமைச்சர் முனைவர் க. பொன்முடி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கத்திற்கு இணைத் தலைவர்கள் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மருத்துவர்மா.மதிவேந்தன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கருத்தரங்கத்தில் கா.திருநாவுக்கரசு, கலைஞரும் - மண்டலும் எனும் தலைப்பிலும் பேரா.சுப. வீரபாண்டியன் - கலைஞரும் - சமூக நீதியும் எனும் தலைப்பிலும் வழக்கறிஞர் அருள்மொழி - கலைஞரும் - பெண்ணுரிமையும் எனும் தலைப்பிலும், கோ.கருணாநிதி - கலைஞரும் பிற்படுத்தப்பட்டோர் நலனும் எனும் தலைப்பிலும் முனைவர் பழ.அதியமான் - கலைஞரும் எளியோரின் ஏற்றமும் எனும் தலைப்பிலும் திருமதி ஓவியா - கலைஞரும் - பெண்ணுரிமையும் கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் - கலைஞரும் - சாதி ஒழிப்பும் எனும் தலப்பிலும் முனைவர் ரா.சுப்பிரமணி - கலைஞரும் - சமத்துவ புரங்களும் எனும் தலைப்பிலும்

மணிக்கோ பன்னீர்செல்வம் கலைஞரும் பட்டினத்தவரும் பழங்குடியினரும் எனும் தலைப்பிலும் தீபக்நாதன் - கலைஞரும் - மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றமும் எனும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர்.

முன்னதாக காலை 10.30 மணியளவில் புகைப்படக் கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டு மாணவர்களின் பேச்சுப் போட்டி நடைபெறுகிறது.

அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஏ.கே. எஸ்.விஜயன், பிரதீப் யாதவ், த.ஆபிரகாம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அமைச்சர் முனைவர் க.பொன்முடி விழா பேருரையாற்றுகிறார்.

செ.கார்மேகம் நன்றி கூறுகிறார்.

### பெரம்பலூர் மாவட்டம்–

# ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் சிவசங்கர் சிறப்புரை!

பெரம்பலூர், செப்.10-

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க.சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் பொது உறுப்பினர்கள் கூட்டம் கொளக்காநத்தம் கிராமத்தில் உள்ள கலைஞர் திடலில் ஒன்றிய செயலாளர் ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் என். கிருஷ்ண மூர்த்தி வரவேற்புரையில் நடைபெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர் சிவசாமி தலைமை வகித்தார். இந்த கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:-

காலை உணவு திட்டம், மகளிர் இலவச பேருந்து திட்டம், கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை, தமிழ் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார். இந்தியா கூட்டணியில் உள்ள ஜார்கண்ட் மாநில முதல்வர் ஹேமந்த் சோரன் மாதம் ஆயிரம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். நம்முடைய முதலமைச்சரை பார்த்து தான் மற்ற மாநிலத்தில் திட்டங்களை கொண்டு வருகின்றனர்.

முதலமைச்சர் ஒரு பள்ளிக்கு ஆய்வு சென்றார். அப்போது ஒரு சிறுவன் சோர்வாக இருந்தான். அவனிடம் கேட்டபோது காலை உணவு சாப்பிடவில்லை. எனது அம்மா வயலுக்கு சென்றுள்ளார் என கூறினான். இதைக்கேட்டு கவலையடைந்த நமது முதலமைச்சர் உடனடியாக காலை உணவு திட்டத்தை முதல்வர் துவக்கினார். இங்கிலாந்து நாட்டில் புதிய ஆட்சி அமைந்துள்ளது. பள்ளிகளில் காலையில் உணவு வழங்கப்படும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர். நம்முடைய முதலமைச்சரின் திட்டம் மாநிலம் கடந்து, நாடு கடந்து பின்பற்றப்படும் திட்டமாகும்.

கடந்த 3 நாட்களாக அமெரிக்காவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இருக்கிறார். அங்கு உள்ள பெரிய பெரிய கம்பெனிகளில் ரூ. 900, 1000 கோடிகளில் தொழில் முதலீடு ஒப்பந்தம் செய்துள்ளார். இதனால் தமிழக இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு உருவாக வாய்ப்புள்ளது. தமிழகத்தில் எந்த தொகுதிக்கும் கொடுக்காமல் குன்னம் தொகுதிக்கு மட்டும் புதிய போக்குவரத்து பணிமனையை முதல்வர் வழங்கி உள்ளார். இந்த பணிமனையால் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து பெரம்பலூர் உள்ளிட்ட நகர் பகுதிகளுக்கு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். 2026 சட்டமன்றத் தேர்தலில் அனைத்து தொகுதிகளையும் திமுக கைப்பற்ற தொண்டர்கள் பாடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் க. முத்துக்கண்ணு, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர் மற்றும் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், தொண்டர்கள், உறுப்பினர்கள், முன்னோடிகள், இளைஞரணி, மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணியினர் கலந்து கொண்டனர். முடிவில் கொளக்காநத்தம் ஊராட்சி மன்ற தலைவரும், கிளைச் செயலாளருமான ராகவன் நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் முன்னாள் ஆலத்தூர் ஒன்றிய குழு தலைவரும், நல்லாசிரியர் விருது பெற்றவருமான க. முத்துக்கண்ணு மற்றும் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் கீழமாத்தூர் கோபால் ஆகிய இருவருக்கும் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தலா ரூ. 1 லட்சம் பொற்கிழி வழங்கப்பட்டது.

# கடலூர் மேற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர் செப். 10.

கழக தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் மேற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 11.09.2024 புதன் கிழமை காலை 10 :15 மணியளவில் காடாம்புலியூர் ஏ.வி.மஹாலில் மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர்.



கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தொ.மு.ச. நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரிதிநிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. கழக முப்பெரும் விழா.

2. நவம்பர் 27 கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் பிறந்த நாள் விழா

3. கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர்சி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.

### கோவை மாநகர் மாவட்டத்தில்

# அனைத்து அணிகளின் பகுதி நிர்வாகிகள் பட்டியல்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!

கோவை, செப். 10-

கோவை மாநகர் மாவட்ட திமுக அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பட்டியல் சம்பந்தமாக கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கடந்த ஓராண்டாக, அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்



பட்டியலை ஒப்படைக்குமாறு, தொடர்ந்து தலைமைக் கழகம் வலியுறுத்தி வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், அன்புத் தளபதி அவர்கள் தலைமையில், கடந்த 16.08.2024 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் மீண்டும், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள், இன்று 10.9.2024 க்குள் தலைமைக் கழகத்தில், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பட்டியலை ஒப்படைக்குமாறு அறிவுறுத்தியதன் படி, அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பட்டியலை, கோவை மாநகர் மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட பகுதிக்கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து, கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் – பெ.சேகர் சிறப்புரை!

# மயிலம் தெற்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம்!

## இரா.சேதுநாதன் அறிக்கை!

விழுப்புரம், செப். 10-

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் 11.9.2024 - புதன் கிழமை மாலை 4 மணியளவில் கூட்டேரிப்பட்டு ஸ்ரீநிவாசா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

ஆர்.சுப்பிரமணி தலைமையில் எஸ்.செல்வகுமார், எஸ்.பாலசுந்தரம், இந்திரா சுரேஷ், பெ.ஆறுமுகம், இ.கோபால கிருஷ்ணன், இ.சசிகுமார், கே.விஜயன், மகேஸ்வரி குமரேசன், கே.எஸ்.அன்சாரி, கே.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும். இக்கூட்டத்தில் அமைச்சர் கே.எஸ். மஸ்தான், மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பெ.சேகர் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இதில் இரா.மாசிலாமணி, செஞ்சி சிவா எம்.எல்.ஏ., எஸ்.அருணாகிரி, ஆர்.அமுதா ரவிக்குமார், வி. மணிமாறன், ஜி.செழியன், அ.சீ.அண்ணாதுரை, ஏ.ராஜாராம், மொடையூர் பெ.துரை, ஆர்.இளம்வழுதி, படூர் ரவி, சாந்தி எழுமலை, யோகேஸ்வரி மணிமாறன், புனிதா ராமஜெயம் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் முப்பெரும் விழா, கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுவதாக ஒன்றிய செயலாளர் இரா.சேதுநாதன், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில்

# நீலகிரி மாவட்ட தி.மு.க. மகளிர் அணி கூட்டம்!

## கோமதி – ஜெயந்தி அறிவிப்பு!

நீலகிரி, செப். 10-

நீலகிரி மாவட்ட திமுக மகளிர் அணி கூட்டம் இன்று (செப்டம்பர் 10 செவ்வாய்கிழமை)

மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் உதகையில் நடைபெறும் என மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கோமதி - மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ஜெயந்தி ஆகியோர் அறிவித்துள்ளனர்.

அவர்களது அறிவிப்பு வருமாறு:-

நீலகிரி மாவட்ட திமுக மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (10.9.2024 - செவ்வாய்கிழமை) மாவட்ட கழக அலுவலகம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் தேர்தல் பணி செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி அவர்களும், கோவை மண்டல பொறுப்பாளர் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் கோவை மாலதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே, மேற்படி கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள், கழக மாவட்ட - நகர - ஒன்றிய பேரூர் கழக மகளிர் துணை செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் மகளிர் பிரதிநிதிகள் மற்றும் கழக மகளிர் அணியினர் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 29.08.2024 அன்று வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, முதன்மைக் கல்வி அலுவலர்.கூ.சண்முகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு ஒன்றியம் தலைச்சோலை அதிமுக ஊராட்சி மன்ற தலைவர் செந்தில் பிரபு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் ஆ. சீனிவாசன், ஒன்றிய செயலாளர் ராஜா (எ) ராஜேந்திரன், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுப் பயணத்தின் 181 வது ஆய்வை பழனி சட்டமன்றத் தொகுதியில் மேற்கொண்டார். சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொடைக்கானலில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் நகர்மன்ற துணைத் தலைவர் மாயக்கண்ணன் கலந்து கொண்டார்.